# முக்கோணிகள் - I

**தரம் - 10**

தொகுப்பு - செ . குணசிங்கம்
கே/தெஹி/ ஸ்ரீ கதிரேசன் தேசிய பாடசாலை




மூன்று பக்கங்களை கொண்ட ஒரு மூடிய தளவுரு முக்கோணி எனப்படும். இம்முக்கோணியில் **AB,BC,AC** என்பன பக்கங்கள் ஆகும். **$B\hat{A}C$, $A\hat{B}C$, $A\hat{C}B$** என்பன கோணங்கள் ஆகும்.

## முக்கோணியின் புறக்கோணம்




**உருவில் முக்கோணி ABC யில் பக்கம் BC யை D வரை நீட்டுகின்றபோது $A\hat{C}D$ எனும் புறக்கோணம் உருவாகும்**

**தேற்றம்:** முக்கோணி ஒன்றின் பக்கம் ஒன்றை நீட்டுவதனால் உண்டாகும் புறக்கோணம் அதன் அகத்தெதிர்க் கோணங்களின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும்.

## செயற்பாடு

☞ பிறிஸ்டல் அட்டைத் துண்டு ஒன்றின் மீது உருவில் காட்டப்பட்டுள்ளவாறு முக்கோணி ஒன்றை வரைக. அதன் ஒரு பக்கத்தை நீட்டிப் புறக்கோணம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு அதன் தொடர்பான அகத்தெதிர்க் கோணங்கள் இரண்டையும் நிழற்றுக.




☞ உருவில் உள்ளவாறு அதே அளவான முக்கோணியை பயிற்சி கொப்பியில் வரைந்து புறக்கோணத்தையும் குறித்து கொள்க

☞ மேலே குறிப்பிட்ட அகத்தெதிர்க் கோணங்கள் இரண்டையும் வெட்டி அடர்களாக வேறாக்குக




☞ வெட்டி வேறாக்கிய அகத்தெதிர்க் கோணங்கள் இரண்டையும் புறக்கோணத்துடன் பொருந்துமாறு வைத்து ஒட்டிக்கொள்க.



## உதாரணம் - 1




$$x = 40^0 + 60^0$$

$$x = 100^0$$

## உதாரணம் - 2




$$x = 146^0 - 77^0$$

$$x = 69^0$$

---

இப்போது நாம் எமது பயிற்சி புத்தகத்தில் 91 ம் பக்கத்தில் மீட்டற் பயிற்சியில் (1) iv வது வினாவை பாரப்போம்.




உருவில் முக்கோணி இலக்கம் 1 யை கவனியுங்கள் அதில் அகக்கோணங்களான $40^0, 70^0$ யும் கூட்டினால் b கோணமாகிய புறக்கோணம் கிடைக்கும்

$$b = 40^0 + 70^0 = 110^0$$

அதேபோல் முக்கோணி இலக்கம் 2 யை கவனியுங்கள்

$$a = 70^0 - 50^0$$

$$a = 20^0$$

அதே போல் பாடபுத்தகத்தில் 91 ம் பக்கம் மீட்டற் பயிற்சியில் ஏனைய வினாக்ககளை நன்கு அவதானித்து செய்து பார்க்க

இப்போது நாம் எமது பாடபுத்தகத்தில் 93 ம் பக்கம் ஏனைய ஒரு சில வினாக்களை பாரப்போம்.

**2.** உருவில் உள்ளவாறு $AB$ யும் $CD$ யும் சமாந்தர மானவையெனின் $A\hat{E}C = B\hat{A}D + E\hat{C}D$ என நிறுவுக.




உங்களுக்கு தெரியும் CED என்ற முக்கோணியின் $A\hat{E}C$ என்ற புறக்கோணமானது $E\hat{C}D$ யையும் $E\hat{D}C$ யையும் கூட்டுவதனால் கிடைக்கும்.

$A\hat{E}C = E\hat{C}D + E\hat{D}C$ யையும் என எழுத முடியும்

அத்துடன் AB யும் CD யும் **சமாந்தரம்** ஆகும்

$B\hat{A}D = E\hat{D}C$ ஆகும். ( **ஒன்று விட்ட கோணம்** )

ஆகவே $E\hat{D}C$ என்ற கோணத்துககு பதிலாக நாம் $B\hat{A}D$ என்ற கோணத்தை குறிப்பிடலாம்

$A\hat{E}C = B\hat{A}D + E\hat{C}D$ ஆகும்

**4.** உருவில்உள்ளவாறு$AB$, $CD$ என்னும் நேர்கோடுகள் $E$ இல் ஒன்றையொன்று இடைவெட்டுகின்றன. தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப $a = 2x$ எனக் காட்டுக.




AED, CEB ஆகிய முக்கோணிகளில் கோணம் $A\hat{E}C$ புறக்கோணமாகும்

$A\hat{E}C = B\hat{C}E + C\hat{B}E$ அல்லது $A\hat{E}C = E\hat{A}D + E\hat{D}A$ ஆகும்

$A\hat{E}C = a + a$ அல்லது $A\hat{E}C = 3x + x$ ஆகும்

$a + a = 3x + x$

$2a = 4x$ **( இரண்டு பக்கமும் 2 ஆல் வகுப்போம் )**

$a = 2x$

## செயற்பாடு

☞ ஒரு பிஸ்டல் அட்டையில் ஒரு முக்கோணியை வரைந்து அதன் அகக்கோணங்களை a, b, c என பெயரிடுக.

☞ a, b, c ஆகிய மூன்று கோணங்களையும் உருவில் உள்ளவாறு வெட்டி வேறாக்குக




☞ வெட்டி எடுத்த a, b, c ஆகிய மூன்று கோணங்களையும் உருவில் உள்ளவாறு ஒரு நேர்கோட்டில் புள்ளி O வில் வைப்பதன் மூலம் $a + b + c = \ 180^0$ என்பதை காணலாம்.

☞ ஒரு முக்கோணியின் மூன்று அகக்கோணங்களின் கூட்டுத்தொகை $180^0$ ஆகும்.

**உதாரணம் - 1** கீழே தரப்படுகின்ற கோணங்கள் மூன்றும் முக்கோணி ஒன்றின் அகக்கோணங்கள் ஆகுமா?

1. $50^0, 40^0, 70^0$ ஆகிய மூன்று கோணங்களையும் கூட்டுகின்ற போது பெறுமானம் $180^0$ கிடைக்கின்றதா என பாருங்கள்

$$50^0 + 40^0 + 70^0 = 160^0$$

எந்த முக்கோணியினதும் மூன்று அகக்கோணங்களின் கூட்டுத்தோகை $180^0$ ஆகும். இங்கு மூன்று கோணங்களின் கூட்டுத்தொகை $180^0$ விட குரைவாகவே உள்ளது. எனவே இவை முக்கோணியின் அகக்கோணங்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

**உதாரணம் - 2**




$$x + 70^0 + 60^0 = 180^0$$
$$x + 130^0 = 180^0$$
$$x = 180^0 - 130^0$$
$$x = 50^0$$

**உதாரணம் - 3**




$$x + x + 40^0 = 180^0$$
$$2x + 40^0 = 180^0$$
$$2x = 180^0 - 40^0$$
$$2x = 140^0$$
$$x = 70^0$$

இப்போது நாம் எமது பாடபுத்தகத்தில் 96 ம் பக்கத்தில் 8.2 பயிற்சியில் (2) iii வது வினாவை பாரப்போம்




$$a + 10 + a - 30 + 2a = 180^0$$
$$4a - 20 = 180^0$$
$$4a = 180^0 + 20$$
$$4a = 200^0$$
$$a = 50^0$$

இப்போது நாம் எமது பாடபுத்தகத்தில் 100 ம் பக்கம் ஏனைய பயிற்சிகளை பாரப்போம்

**2.** தரப்பட்டுள்ள உருவில் நாற்பக்கல் $ABCD$ யின் மூலைவிட்டம் $AC$ யினால் $B\hat{A}D$, $B\hat{C}D$ ஆகியன இருசமகூறிடப்பட்டுள்ளன. $A\hat{B}C = A\hat{D}C$ என நிறுவுக.




உங்களுக்கு இந்த பிரசினத்தை தீர்ப்பதற்கு **சமப்படுத்தல்** முறையினை பயன்படுத்த முடியும். அதற்க்காக உருவில் இரு முக்கோணிகளை இணங்கான்போம்.

அதாவது முக்கோணி ABC, ADC யில்

$B\hat{A}C = C\hat{A}D$

$B\hat{C}A = A\hat{C}D$ எனக் கொள்க.

முக்கோணி ABC யில் $A\hat{B}C + B\hat{A}C + B\hat{C}A = 180^0$ ஆகும்

முக்கோணி ADC யில் $A\hat{D}C + C\hat{A}D + A\hat{C}D = 180^0$ ஆகும்

ஆகவே $\mathbf{A\hat{B}C + \cancel{B\hat{A}C} + \cancel{B\hat{C}A} = A\hat{D}C + \cancel{C\hat{A}D} + \cancel{A\hat{C}D}}$

$\mathbf{A\hat{B}C = A\hat{D}C}$ ஆகும்.

**5.** முக்கோணி $ABC$ யில் $\hat{A} = \hat{B} = \hat{C}$ ஆகும். $B\hat{A}C$ யின் இருகூறாக்கியானது பக்கம் $BC$ ஐ $D$ இல் சந்திக்கின்றது.

(i) $B\hat{A}C$ யின் பெறுமானத்தைக் காண்க.

(ii) $\Delta ABD$ ஒரு செங்கோண முக்கோணியென நிறுவுக.

முதலில் தகவல்களுக்கு பொருத்தமான படத்தினை வரைந்து தரவுகளை அதில் குறிக்க.




*i* ) ABC சமபக்க முக்கோணி கோணங்கள் சமன்.

எனவே – $B\hat{A}C \quad \frac{180^0}{3} = 60^0$

ii ) ABC சமபக்க முக்கோணி கோணங்கள் சமன்.

$A\hat{B}C + B\hat{A}D + A\hat{D}B = 180^0$

$60^0 + 30^0 + A\hat{D}B = 180^0$

$90^0 + A\hat{D}B = 180^0$

$A\hat{D}B = 180^0 - 90^0$

$A\hat{D}B = 90^0$

முக்கோணி ABD செங்கோண முக்கோணி ஆகும்